# மணவிழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை.... முதல் பக்கத் தொடர்ச்சி

பிறரும் இந்த அடக்குமுறைகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள். மனைவி, மகனை இழந்து உடல்நிலையும் இதனால் அவருக்கு பாதிக்கப்பட்டது. அப்படி பாதிக்கப்பட்ட நேரத்தில்கூட இந்தப் பகுதிக்கு உற்ற துணையாக இருந்து கழகப் பணியாற்றியவர்தான் நம்முடைய கே.பி.சாமி அவர்கள்.

இன்றைக்கு அவர் விட்டுச் சென்றிருக்கக் கூடிய இந்தப் பணிகளை எல்லாம் அவரோடு இருந்து அவருடைய அனுபவங்களை எல்லாம் பெற்று இன்றைக்கு கழக பணிகள் ஆற்றிக் கொண்டிருக்கக்கூடியவர்தான் நம்முடைய கே.பி.சங்கர் அவர்கள்.

2011 மாநகராட்சி மன்றத் தேர்தலில் சிறையில் இருந்து போட்டியிட்டு வெற்றி பெற்றார். தந்தை, அண்ணன் வழியில் இவரும் பணியாற்ற வேண்டும் என்று சொல்லி 2021 தேர்தலில் திருவொற்றியூர் தொகுதியில் இவருக்கு வாய்ப்பு கொடுத்தேன். அதன்படி, மக்கள் எப்போதும் அணுகும் பிரதிநிதியாக இருந்து சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடியவர் நம்முடைய சங்கர் அவர்கள்.

கடந்த ஓராண்டு காலமாக முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை அரசு சார்பிலும், கட்சியின் சார்பிலும், தனிப்பட்ட முறையிலும் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் இருக்கக்கூடிய பல்வேறு மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை தொடர்ந்து கொண்டாடிக் கொண்டு வருகிறோம். இந்தியாவில் இப்படிப்பட்ட விழாக்கள் எந்தத் தலைவருக்கும் நடந்தது கிடையாது. இவ்வளவு சிறப்பான விழாக்கள் நடத்தியிருக்கின்றோம் என்று சொல்லும் அளவிற்கு நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, தலைவர் கலைஞர் பெயரால்; கிண்டியில் உயர்சிறப்பு மருத்துவமனை, மதுரையில் பிரம்மாண்டமான நூலகம், கிளாம்பாக்கத்தில் அனைத்து வசதிகளும் கொண்ட பேருந்து முனையம் போன்ற எத்தனையோ பயனுள்ள அமைப்புகளை தலைவர்கலைஞர்பெயரால்ஏற்படுத்தியிருக்கிறோம்.

தம்பி உதயநிதி சொன்னதுபோல, 1 கோடியே 15 லட்சம் மகளிர் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் பெறக்கூடிய அளவிற்கு கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம் அதுவும் கலைஞர் பெயரில்தான் அமைந்திருக்கிறது.

### 100 ரூபாய் நாணயம் தான் ஆனால் மதிப்போ ரூ.10,000

இதற்கெல்லாம் மகுடம் வைப்பதுபோல், நேற்றைய தினம் நடந்த நிகழ்ச்சி, நாணயம் வெளியீடு விழா. நாணயம் அறிவாலயத்திற்கு வந்துவிட்டது. யார் வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் சென்று 100 ரூபாய் நாணயத்தை உரிய தொகையைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். நேற்றைய தினம் நடந்த நிகழ்ச்சியை நீங்கள் எல்லாம் பார்த்திருப்பீர்கள். ஒன்றிய பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள் நேற்றைக்கு வருகை தந்து அந்த நிகழ்ச்சியில் பங்கேற்று கலைஞர் அவர்களுடைய நினைவிடத்தை போய் பார்க்கவேண்டும் என்று நாங்கள் கூட கேட்கவில்லை, பார்த்தே தீரவேண்டும் என்று அவரே கேட்டு, முழுமையாக அத்தனையும் பார்த்துவிட்டு இதுமாதிரி எங்கேயும் பார்த்ததில்லை என்று பாராட்டிவிட்டுச் சென்றார். அதற்கு பிறகு நிகழ்ச்சிக்கு வந்தார். வந்தவுடனே ஒரு பெரிய அதிர்ச்சியை எங்களுக்கெல்லாம் கொடுத்தார். இந்த அரங்கத்தில் இருக்கக்கூடிய அத்தனை பேரும் எழுந்து நின்று கலைஞருக்கு மரியாதை செலுத்துங்கள் என்று சொன்ன அந்த காட்சியை இன்றைக்கும் என்னால் மறக்க முடியவில்லை. நேற்று இரவு முழுவதும், மகிழ்ச்சியில் தூக்கம் வரவில்லை.

### வரலாற்றில் பொறிக்கத்தக்க உரை!

பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்களுடைய நேற்றைய உரை உள்ளபடியே கூட்டணிக் கட்சித் தலைவர்கள் எல்லாம் பேசினால் எப்படி பேசுவார்களோ அதைவிட அதிகமாக, திமுகவினர் பேசுவதைவிட அதிகமாக, சிறப்பாக தலைவர் கலைஞர் அவர்களைப் பற்றி அவர் பேசியது உள்ளபடியே வரலாற்றில் பொறிக்கத்தக்க உரையாக அந்த உரை அமைந்தது. கலைஞரை இந்தளவிற்கு புகழ வேண்டும், பாராட்டிப் பேச வேண்டும் என்ற அவசியம் அவருக்கு இல்லை. அவருக்கு தேவையும் இல்லை. ஆனாலும் பேசினார் என்றால், உள்ளத்தில் இருந்து உண்மையை பேசினார் அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள்.

இதை சிலரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் என்றொருவர் தமிழ்நாட்டில் இருக்கிறார். அவர் நேற்று பேட்டி கொடுக்கிறார். என்னவென்றால், நாணயம் வெளியிடுகிறார்கள். இந்தியில் இருக்கிறது. தமிழில் இல்லை. தமிழ், தமிழ் என்று முழங்குகிறார்களே. இந்தியில் இருக்கிறது என்று சொல்கிறார். முதலில் அரசியல் தெரிந்திருக்கவேண்டும். நாட்டின் நடப்பு புரிந்திருக்க வேண்டும். அந்த நிகழ்ச்சி எப்படி நடக்கிறது என்றால், ஒன்றிய அரசு அனுமதி கொடுத்து ஒன்றிய அரசின் மூலமாக நடைபெறக்கூடிய நிகழ்ச்சி இந்த நிகழ்ச்சி. ஏற்கனவே, பல பேருக்கு நாணயங்கள் வெளியிடப்பட்டிருக்கிறது. மறைந்த எம்.ஜி.ஆர் அவர்களுக்கு நாணயம் வெளியிடப்பட்டிருக்கிறது. அதை போல பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுக்கு நாணயம் வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த நாணயத்தை எல்லாம் ஒரு வேளை பார்த்திருக்கமாட்டார் என்று நினைக்கிறேன். அதை எடுத்து பாருங்கள். அனைத்து தலைவர்களுக்கும் நாணயம் வெளியிடுகிறபோது ஒன்றிய அரசு இந்தியில்தான் எழுதி, அதன்பிறகு ஆங்கிலத்தில் எழுத்துக்கள் அமைந்திருக்கும்.

### அண்ணாவுக்கு நாணயம் கலைஞர் செய்த அதிசயம்!

ஆனால் அண்ணா அவர்களுக்கு நாணயத்தை வெளியிடுகிறபோது தலைவர் கலைஞர் அவர்கள் என்ன செய்தார் என்றால், யாரும் செய்யாத ஒரு அதிசயத்தை செய்தார். அண்ணா அவர்களின் தமிழ் கையெழுத்து அதில் இடம்பெறச் செய்யவேண்டும் என்று சொல்லி, அண்ணா அவர்களின் தமிழ் கையெழுத்து நாணயத்தில் பொறிக்கப்பட்டு அதற்கு பிறகுதான் அது வெளியிடப்பட்டது.

வலிக்கிறது? அதைத்தான் நான் கேட்கிறேன்.

எம்.ஜி.ஆர். அவர்களுக்கு நாணயம் வெளியிட்டார்கள். யார் வெளியிட்டார்கள் தெரியுமா? ஒன்றியத்தில் இருந்து யாரும் வரவில்லை. எடப்பாடி பழனிசாமியே வெளியிட்டார். ஏனென்றால், ஒன்றிய அரசு அவரை மதிக்கவில்லை. அவரை ஒரு முதலமைச்சராகவே நினைக்கவில்லை. வர மறுத்துவிட்டார்கள். இதுதான் அவருக்கு இருந்த மரியாதை. இன்றைக்கு நாம் அழைத்த அடுத்த விநாடி ஒரு சொல்கூட தட்டாமல், ஒரு 15 நிமிடம், 30 நிமிடத்திற்கு நடத்திவிட்டு போக வேண்டும் என்று சொன்னதற்கு, 15 நிமிடம் என்ன? எவ்வளவு நேரம் இருந்தாலும் காத்திருந்து அந்த நிகழ்ச்சியை நடத்திவிட்டு போகிறேன் என்று சொல்லிக் கொண்டு வந்தார். ஒன்றிய அமைச்சர் ராஜ்நாத் சிங். அதுதான் தி.மு.க.விற்கு இருக்கக்கூடிய பெருமை; கலைஞருக்கு இருக்கக்கூடிய சிறப்பு.

**கடந்த ஓராண்டு காலமாக முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை அரசு சார்பிலும், கட்சியின் சார்பிலும், தனிப்பட்ட முறையிலும் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் இருக்கக்கூடிய பல்வேறு மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை தொடர்ந்து கொண்டாடிக் கொண்டு வருகிறோம். இந்தியாவில் இப்படிப்பட்ட விழாக்கள் எந்தத் தலைவருக்கும் நடந்தது கிடையாது. இவ்வளவு சிறப்பான விழாக்கள் நடத்தியிருக்கின்றோம் என்று சொல்லும் அளவிற்கு நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.**

அதுபோலதான், தலைவர் கலைஞர் அவர்களுடைய நாணயத்தை வெளியிடுகின்றபோது கலைஞருக்கு மிகவும் பிடித்த 'தமிழ் வெல்லும்', பெரும்பாலும் அவர் தமிழில் கையெழுத்து இடுகிறபோது பெரும்பாலும், 'தமிழ் வெல்லும், தமிழ் வெல்லும்' என்று சொல்லித்தான் கையெழுத்திடுவார். இல்லையென்றால், 'அண்ணா வாழ்க, அண்ணா புகழ் ஓங்குக, பெரியார் வாழ்க' என்று சொல்லிதான் கையெழுத்திடுவார். ஆகவே, தமிழ் வெல்லும் என்பது தமிழில்தான் எழுதப்பட்டிருக்கிறது. இதைக்கூட அவர் பார்க்காமல், புரிந்து கொள்ளாமல், தெரிந்து கொள்ளாமல், இப்படி ஒரு எதிர்க்கட்சித் தலைவர் நமக்கு வாய்த்திருக்கிறார் என்றுதான் வருத்தமாக இருக்கிறது. கேட்கிறார்... "ஏன் ராகுல் காந்தியை அழைக்கவில்லை?" அய்யா எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, கலைஞருக்கு நாணயம் வெளியிடுவது ஒன்றிய அரசு. அதனால் ஒன்றிய அமைச்சரை அழைத்து அந்த நிகழ்ச்சியை நாங்கள் சிறப்பாக நடத்தி முடித்திருக்கிறோம். இதில் பழனிசாமிக்கு எங்கே

### கலைஞர் விழாவை விமர்சிக்க எடப்பாடிக்கு என்ன யோக்கியதை?

இன்னும் ஒன்றை சொல்லவேண்டுமென்றால், அம்மா, அம்மா என்று புகழ்ந்து கொண்டு இருக்கிறார்களே அதிமுகவினர், பாக்கெட்டில் படத்தை வைத்துக் கொண்டு பூஜை செய்து கொண்டிருக்கிறார்களே, அந்த அம்மையார் இறந்து எத்தனை வருடங்கள் ஆகிறது? நான் கேட்கிறேன், இதுவரைக்கும் அந்த அம்மையார் அவர்களால் வளர்க்கப்பட்டவர்கள், உருவாக்கப்பட்டவர்கள் ஒரு இரங்கல் கூட்டமாவது நடத்தியிருக்கிறார்களா? ஒரு இரங்கல் கூட்டத்தை நடத்துவதற்கு கூட யோக்கியதை அற்றவர்கள், கலைஞர் அவர்களுடைய விழாவை பார்த்து விமர்சனம் செய்வதற்கு உங்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது என்றுதான் நான் கேட்கிறேன்.

ராஜ்நாத் சிங் அவர்களை நாம் அழைத்ததால் ஏதோ பா.ஜ.க.வோடு நாம் உறவு வைத்துக் கொண்டிருக்கிறோம், உறவு வைக்கப்போகிறோம் என்று ஒரு செய்தியை கிளப்பிவிட்டிருக்கிறார்கள். இது ஊடகத்திற்கு ஒரு தீனி. ஒவ்வொரு ஊடகங்களும், ஒவ்வொரு கோணத்தில் பேசிக் கொண்டிருக்கிறார்கள். திட்டினாலும் தி.மு.க.வைதான், வாழ்த்தினாலும்

தி.மு.க.வைதான். நாங்கள் எல்லாம் ரகசிய உறவு வைத்துக் கொள்ளவேண்டும் என்ற அவசியமே இல்லை.

அம்மையார் இந்திரா காந்தி அவர்களே சொன்னார்கள், கலைஞரை பொறுத்தவரைக்கும், தி.மு.க.வை பொறுத்தவரைக்கும் எதிர்த்தாலும் கொள்கையோடு எதிர்ப்பார்; ஆதரித்தாலும் கொள்கையோடு ஆதரிப்பார் என்று சொல்லியிருக்கிறார். எங்களுக்கு அது ஒன்றே போதும். அந்த அளவிற்கு மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் கூட நாங்கள் தீர்மானம் போட்டிருக்கிறோம். முதலில் பழனிசாமி அவர்கள் அதைப் படிக்க வேண்டும். பழனிசாமி மாதிரி ஊர்ந்து சென்று, பதுங்கி சென்று பதவி வாங்குகின்ற பழக்கம் திமுகவுக்கு கிடையாது. எல்லோருக்கும் உரிய மரியாதையை நாங்கள் கொடுப்போம். அதற்காக நிச்சயமாக சொல்கிறேன், உறுதியாக சொல்கிறேன் அண்ணா மீது ஆணையிட்டு சொல்கிறேன், நமக்கென்று இருக்கக்கூடிய உரிமையை ஒருநாளும் விட்டுக்கொடுக்க மாட்டோம். இதுதான் அண்ணாவும், கலைஞரும் நமக்கு அமைத்துத் தந்திருக்கக்கூடிய பாதை.

அப்படிப்பட்ட இயக்கத்தை சார்ந்திருக்கக்கூடிய குடும்பத்தில்தான் இன்றைக்கு இந்த மணவிழா நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இங்கே கூட தம்பி உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசுகின்றபோது, சங்கருக்கு கோபம் வரும் என்றார். நான் சொல்கிறேன், கோபம் இருக்கிற இடத்தில் தான் குணம் இருக்கும். கட்சிக்கென்று ஒரு பிரச்சினை வருகின்றபோது பெரிய கோபம் வந்தே தீரவேண்டும். அப்படிப்பட்ட ஆற்றலுக்குரியவராக நம்முடைய சங்கர் விளங்கிக் கொண்டிருக்கிறார்.

அந்த சங்கர் இல்லத்தில் நடக்கின்ற இந்த திருமணம், அந்தத் திருமணத்தில் நானும் உங்களோடு பங்கேற்று மணமக்களை வாழ்த்துகிற நேரத்தில் மணமக்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள்! பிறக்கக்கூடிய குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயரைச் சூட்டுங்கள். ஏனென்றால், தமிழுக்குச் செம்மொழி என்று பெருமையைப் பெற்றுத் தந்தவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

ஆகவே, புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லியிருக்கக்கூடிய, வீட்டுக்கு விளக்காக, நாட்டுக்குத் தொண்டர்களாக மணமக்கள் சிறப்பாக வாழவேண்டும், வாழவேண்டும் என்று மணமக்களை வாழ்த்தி விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா:

# 'தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர்!' குறும்பட - சுருள்படப் போட்டி!

## விண்ணப்பிக்க கால அவகாசம் நீட்டிப்பு: தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஆக.21-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை கொண்டாடும் வகையில் "தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர்" எனும் குழுவின் சார்பில் குறும்பட போட்டி (Short film Competition) மற்றும் சுருள்பட போட்டி (Reels Competition) க்கான கால அவகாசம் நீட்டிக்கப் படுவதாக தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள் தொடர்பாக தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர் எனும் குழுவின் சார்பில் குறும்படபோட்டி (Short film Competition) மற்றும் சுருள்பட போட்டி (Reels Competition) நடத்துவது தொடர்பான செய்தி வெளியீடு 31.10.2023 அன்று வெளியிடப்பட்டது.

அச்செய்தி வெளியீட்டில் இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்களுடன் கூடிய குறும்படங்கள் மற்றும் சுருள் படங்களை அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து இப்போட்டிகளுக்கான கால அவகாசம் 15.01.2024 வரை நீட்டிக்கப்பட்டது.

அதனடிப்படையில் குறும் படங்கள் மற்றும் சுருள் படங்கள் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளன. இதனை பார்வையிட்ட குழு, மேற்கூறிய தலைப்பில் குறும்படங்கள் மற்றும் சுருள்படங்கள், ஆகியவற்றை சமர்ப்பிக்க மேலும் கால அவகாசம் வழங்க முடிவு செய்துள்ளது.

இப்போட்டிக்களுக்காக ஏற்கனவே குறும்படங்கள் மற்றும் சுருள் படங்களை அனுப்பிய போட்டியாளர்கள் அப்படங்களை மீண்டும் அனுப்ப தேவையில்லை. புதியதாக கலந்து கொள்ள விருப்பமுள்ள வர்கள் இணைக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர் (உதாரணமாக சமூக நீதி, கல்வியில் புரட்சி, சுகாதார துறையில் புரட்சி, தொழிற்துறை மேம்பாடு, மாநில அரசின் உரிமை, பெண்கள் முன்னேற்றம், கிராமப்புற / நகர்ப்புற வளர்ச்சி) என்ற தலைப்பில் குறும்படங்களை (Short film) (அதிகபட்சம் 10 நிமிடங்கள்) உருவாக்கி அதனை விண்ணப்பங்களுடன் 31.08.2024 தேதிக்குள் (shortfilmkalaignar100@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இதேபோல் சுருள்பட போட்டியில் (Reels) கலந்து கொள்ள விருப்பமுள்ள வர்கள் தொலைநோக்குச் சிந்தனையாளர்கலைஞர் எனும் தலைப்பில் புதிய சுருள்படங்களை 30 வினாடிகள் முதல் 1 நிமிடம் வரை இருக்கும் வகையில் உருவாக்கி விண்ணப்பங்களுடன் 31.08.2024 தேதிக்குள் (reelskalaignar100@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

குறும்பட போட்டி (Short film Competition) மற்றும் சுருள் பட போட்டி (Reels Competition) களுக்கான வழிகாட்டி நெறி முறைகளை https://dipr.tn.gov.in (செய்தி வெளியீடு (Press release) எண்.2179, நாள்:31.10.2023) என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் நல்லான் பிள்ளை பெற்றாள் அரசு மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திடீர் ஆய்வு மேற்கொண்டார். முன்னதாக பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி,சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் சிற்றரசு ஆகியோர் மரக்கன்றுகளை நட்டு வைத்தனர். இதில் மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், விஜயராகவன், பச்சையப்பன், துணை சேர்மன் ஜெயபாலன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், மாவட்ட பிரதிநிதி கதிரவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---

முதல்வர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலில்

# இந்தியாவின் முன்னோடி மாநிலமாக திகழும் தமிழ்நாடு !

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பேட்டி!

திருவாரூர், ஆக.21-

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், கே.மாரிமுத்து எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும் அரசு அலுவலர்களும் பங்கேற்றனர்.

அலுவல் ஆய்வு கூட்டத்தின்போது தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

திராவிட நாயகர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் தொடர்ந்து இதுபோன்ற முதலமைச்சரின் திட்டம் சார்ந்த ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகிறது. முதலமைச்சரின் திட்டங்கள் மக்களை சென்றடைவதை உறுதிசெய்யும் வேலையினை மக்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள் செய்து வருகிறோம். அந்தவகையில், இன்றைய தினம் திருவாரூர் மாவட்டத்தில், அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மாவட்டமான திருவாரூர் மிகச் சிறப்பான முன்னேற்றங்களை கடந்த மூன்று ஆண்டுகளில் கண்டுவருகிறது. மிகவும் பிற்படுத்தப்பட்ட பல மக்கள் வசிக்கும் இப்பகுதியில் மிக பெரிய முன்னேற்றத்தினை முதலமைச்சர் அவர்கள் பல திட்டங்கள் வாயிலாக அளித்துள்ளார்கள். இனிவரும் காலங்களில் திருவாரூர் மாவட்டமானது மாநிலத்தில் முதலிடம் வகிக்கும் மாவட்டமாக மாறுவதற்கான சாத்தியக் கூறுகள் நிச்சயமாக உள்ளது. அதற்கான பணிகளை முதலமைச்சர் அவர்கள் செய்துவருகிறார்கள்.

திருவாரூர் மாவட்டத்தில், ஒரு பானைக்கு, ஒரு சோற்று பதம் என்கிற வகையில் மன்னார்குடி பகுதியில் மட்டுமே ஏறத்தாழ ரூ.1500 கோடி மதிப்பீட்டில் பல திட்டங்கள் வரப்பெற்றுள்ளது. நீடாமங்கலம் மேம்பாலம் திட்டம் உள்ளிட்ட பல முக்கியமான திட்டங்கள் திருவாரூர் மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. அவ்வாறு மகத்தான திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார்கள். முதலமைச்சர் அவர்கள் தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதியின்படி திருவாரூர் மாவட்டத்தில் 70 சதவீத வாக்குறுதியினை நிறைவேற்றியுள்ளார்கள். முதலமைச்சர் அவர்களின் எதிர்வரும் அமெரிக்கா பயணம் வரலாற்றுச் சிறப்பு மிக்க பயணமாக அமையும். பல இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை அளிக்ககூடிய மகத்தான பயணமாக இப்பயணம் அமையும் என தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், திருவாரூர் ஒன்றியபெருந்தலைவர் திரு.புலிவலம்.ஏ.தேவா, நீடாமங்கலம் ஒன்றியபெருந்தலைவர் சோம.செந்தமிழ்ச்செல்வன், மன்னார்குடி நகர்மன்ற தலைவர் மன்னை.சோழராஜன், திருவாரூர் நகர்மன்ற தலைவர் திருமதி.புவனபிரியா செந்தில், கூத்தாநல்லூர் நகர்மன்ற தலைவர் திருமதி. பாத்திமா பஃஷிரா தாஜ், திருவாரூர் நகர்மன்ற துணைத்தலைவர் திருமதி. அகிலா சந்திரசேகர், கோட்டூர் ஒன்றியபெருந்தலைவர் திருமதி. மணிமேகலை, பணிநியமனக் குழு உறுப்பினர் வாரை.எஸ்.பிரகாஷ் உள்ளிட்ட அனைத்துத் துறை உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



திருவாரூர் மாவட்ட அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், கே.மாரிமுத்து எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும் அரசு அலுவலர்களும் பங்கேற்றனர்.